**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C.No.56/2020**

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 04 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : திரு.தர்மலிங்கம் (அ.சா.8) | தொழில் | : டெய்லர் |
| த/பெ., க/பெ. | : திரு.பழனிச்சாமி | வயது | : 55 |
| கிராமம் | : பழைய ஆயக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 04.11.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1ம் எதிரி முன்னிலையாகியுள்ளனர்.

2ம் எதிரி முன்னிலையாகவில்லை. அதற்கான மனு ஏற்கப்பட்டது.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் பழைய ஆயக்குடியில் குடியிருந்து டெய்லர்தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். நானும் கோபால் என்பவரும் 04.04.2018 அன்று குறும்பர் மடத்தின் அருகில் மாலை 5.00 மணி அளவில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அங்கு கத்தி குத்து நடந்தது சம்பந்தமாக போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னவென்று விசாரித்தபோது அந்த இடத்தில் கத்தி குத்தி நடந்ததாகவும், அது சம்பந்தமாக வரைபடம் வரைந்ததாகவும் கூறி கையொப்பம் கேட்டார்கள். அதற்கு நானும் கோபால் என்பவரும் சாட்சியாக கையொப்பம் இட்டோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை :–</u>** காயம்பட்டதாக சொல்லப்படும் கிருஷ்ணசாமி எனக்கு உறவினரா என்றால் உறவினர் அல்ல, நான் அந்த மடத்தில் நிர்வாகத்தில் இருக்கிறேன். பார்வை மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, கத்தி குத்து சம்பந்தமாக வரைபடம் வரைந்ததற்கு காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கான கையொப்பமிட்டேன். இது சம்பந்தமாக போலிசார்என்னை விசாரிக்கவில்லை என்றும், நான் மடத்தின் நிர்வாகஸ்தர் என்பதால் போலீசார் விசாரித்ததாக முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.11.04 19:12:01 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.